# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2007 / 2008

## HELD IN AUGUST – 2008

## BBA / COM 28 (II) – COST AND MANAGEMENT ACCOUNTING – II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) பின்வருவன பற்றி நீர் யாது விளங்குகிறீர்?

(i) வினைத்திறன் வீதம் (Efficiency Ratio)

(ii) செயற்பாட்டு வீதம் (Activity Ratio)

(iii) இயலளவு வீதம் (Capacity Ratio)

(03 புள்ளிகள்)

(ஆ) Lanka Ltd நியமக் கிரய முறைமையில் இயங்குகின்றது. பின்வரும் தரவுகள் கம்பனியால் வழங்கப்பட்டவையாகும்.

| **உண்மையானவை** | **ரூபா.** |
|---|---|
| மூலப்பொருள் நுகர்வு ( ஒரு Kgs ரூபா. 52.50 படி 3600 kgs) | 189,000 |
| நேர்கூலிகள் | 22,100 |
| மாறும் செலவினங்கள் | 62,000 |
| நிலையான செலவினங்கள் | 188,000 |

இக்காலப் பகுதியில் முடிவுப் பொருள்கள் வெளியீடு 3500 அலகுகள்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்கான நியம உற்பத்தி இயலளவு 4800 அலகுகளாகும். அதன் பொருள் ஒன்றுக்கான நியமக் கிரயம் வருமாறு :

| | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் கிரயம் | 50 |
| நேர்கூலிகள் | 06 |
| மாறும் செலவினங்கள் | 20 |
| நிலையான செலவினங்கள் | 40 |
| | 116 |

குறிப்பிட்ட காலப்பகுதிக்கான நியமக் கூலிகள் 9600 மணித்தியலாங்கள். மணிக்கு ரூபா 3 அடிப்படையில் காணப்படுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதியில் உண்மையாக வேலை செய்த நேரம் 6400 மணித்தியாலங்கள். இதனைவிட இயந்திரம் செயலிழந்ததன் காரணமாக வேலையற்றிருந்த 400 மணித்தியாலங்களுக்கும் இழப்பீட்டுக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது. பொதுவான கூலி வீதம் மணிக்கு ரூபா 3.25 ஆகும்.

பின்வரும் முரண்களினை நீர் கணிக்குக :

(i) நேர் மூலப் பொருள் : கிரயம், விலை, பாவனை.

(ii) நேர் ஊழியம் : கிரயம், வீதம், வினைத்திறன் வேலையற்றிருக்கும் நேரம்

(iii) மாறும் செலவினம் : செலவினம்

(iv) நிலையான செலவினம் : செலவினம், அளவு, இயலளவு, வினைத்திறன்

(30 புள்ளிகள்)

(மொத்தம் 33 புள்ளிகள்)

02. (அ) 'நிகழத்தக்க பாதீடு' என்பது யாது? சாதாரண பாதீட்டினை விட நிகழத்தக்க பாதீட்டில் காணக்கூடிய நன்மைகள் யாவை?

(03 புள்ளிகள்)

(ஆ) HR Ltd நிறுவனம் A, B, C எனும் மூன்று வகையான உற்பத்திகளினை மேற்கொள்கின்றது. ஜனவரி மாதத்திற்கான உற்பத்தி தொடர்பான தகவல்கள் வருமாறு.

| **உற்பத்தி** | **A** | **B** | **C** |
|---|---|---|---|
| விற்பனை (அலகுகளில்) | 1000 | 2000 | 1500 |
| அலகுக்கான விலை ரூபாவில் | 100 | 120 | 140 |
| **மூலப்பொருள் பாவனை (கி.கி)** | | | |
| $M_1$(ரூபா.4 per kg) | 4 | 3 | 2 |
| $M_2$(ரூபா.6 per kg) | 2 | 3 | 1 |
| $M_3$(ரூபா.9 per kg) | - | 2 | 1 |
| **முடிவுப் பொருள்கள் அலகுகளில்** | | | |
| ஜனவரி 1ல் | 1000 | 1500 | 500 |
| ஜனவரி 31ல் | 1100 | 1650 | 550 |
| **மூலப்பொருள் இருப்பு Kg ல்** | **$M_1$** | **$M_2$** | **$M_3$** |
| ஜனவரி 1ல் | 26000 | 20000 | 12000 |
| ஜனவரி 31ல் | 31200 | 24000 | 14400 |

ஜனவரி மாதத்திற்கான பின்வரும் பாதீடுகளினை நீர் தயாரிக்கும்படி வேண்டப்படுகின்றீர்.

(i) விற்பனைகள் (தொகை, பெறுமதிகளில்)

(ii) உற்பத்தித் தொகை

(iii) மூலப்பொருள் பாவனை தொகையில்

(iv) மூலப்பொருள் கொள்வனவு (தொகை, பெறுமதிகளில்)

(30 புள்ளிகள்)

(மொத்தம் 33 புள்ளிகள்)

03. MN Ltd முதலீட்டுத் தீர்மான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. இதில் A,B,C எனும் ஒன்றில் ஒன்று தங்கியிராத (Mutually Exclusive) செயற்திட்டங்கள் தீர்மானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக முதலீட்டு முகாமையாளரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு :

| | முதலீட்டுத் தீர்மானம் A ரூபா | முதலீட்டுத் தீர்மானம் B ரூபா | முதலீட்டுத் தீர்மானம் C ரூபா |
|---|---|---|---|
| ஆரம்ப முதலீடு | 105,000 | 187,000 | 245,000 |
| Aக்கான காசோட்டம் Y1 - 3 | 48,000 | | |
| Bக்கான காசோட்டம் Y1 - 6 | | 48,000 | |
| Cக்கான காசோட்டம் Y1 - 9 | | | 48,000 |
| தேறிய காசோட்டம் (NPV) Df 10% ல் | 14,376 | 22,040 | 31,432 |
| Ranking | 3rd | 2nd | 1st |
| உள்ளக வருவாய் வீதம் (IRR) | 17.5% | 14% | 13% |
| Ranking | 1st | 2nd | 3rd |

தேவைப்படுவது :

(அ) MN Ltd முகாமைக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கிய அறிக்கையைத் தயாரிக்குக :

* மூன்று செயற்திட்டங்களினதும், மூலதனச் செலவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினை வெளிப்படுத்தக் கூடிய வரைபடம்.

* செயற்திட்டம் A யினை NPV , IRR அடிப்படையில் மதிப்பிடும் போது வரிசைப்படுத்துகையில் ஏற்பட்ட வேறுபாட்டுக்கான காரணங்களுக்கான விளக்கம்.

* MN Ltd க்கு சிறந்த செயற்திட்டம் ஒன்றினை தெரிவு செய்வதற்கு சிபாரிசு செய்க.

(30 புள்ளிகள்)

(ஆ) பணிப்பாளர்களில் ஒருவர் செயற்திட்டங்களை மதிப்பிடுவதற்கு Pay Back Period முறையினை முன்மொழிகின்றார். இந்நிலையில் நீர் அவருக்கு NPV , IRR முறைகளினை Pay Back Period முறையுடன் ஒப்பிட்டு அதிலுள்ள நன்மை தீமைகளை மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 34 புள்ளிகள்)

*****